**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW27**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **திரு. ரமேஷ்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 09th day of December 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவருக்காக குவிமுச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை காணொலி காட்சி கணினி திரையிலேயே எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சிராப்பள்ளி, வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பறக்கும் படையில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 04.02.2021 அன்று திருச்சிராப்பள்ளி மேற்கு வருவாய் வட்டாட்சியராக

பணிபுரிந்து வந்தபோது, வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திலிருந்து கேட்டுக்கொண்டதின்பேரில், நான் விசாரணை செய்து, ரஞ்சித்குமார், த/பெ.ரமேஷ் என்பவரின் சாதிச்சான்றிதழின் மெய்த்தன்மை குறித்து வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதற்கு நான் 04.02.2021 ஆம் தேதியன்று என்னுடைய அலுவலகத்தில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்கள் வழங்கிய ரகசிய தகவலின் அடிப்படையிலும் ரஞ்சித்குமார், த/பெ.ரமேஷ் என்பவர் இந்து, பள்ளன், பட்டியல் வகுப்பைச்சேர்ந்தவர் என்று மெய்த்தன்மை அறிந்து அறிக்கை அளித்துள்ளேன். **அந்த அறிக்கை இது தான். அது அ.சா.ஆ.47 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>7 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்து போயர் நாயக்கர் பட்டியல் இனத்தை சாராதவர் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன இந்து போயர் நாயக்கர் ஜாதி சில பகுதிகளில் பிற்படுத்தப்பட்டவர்களாகவும், சில பகுதிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாகவும் உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். கலப்புத் திருமணம் செய்பவரின் குழந்தைகளுக்கு தகப்பனார் வழி சாதி சான்றிதழோ அல்லது தாயார் வழி சாதிச்சான்றிதழோ வழங்கப்படும் என்று சொன்னால் சரிதான். கலப்புத் திருமணம் செய்து கொண்ட பின் விவாகரத்து செய்து மீண்டும் வேறொரு திருமணம் செய்துகொண்டால் அவருக்கும் முதல்கணவருக்கும் பிறந்த குழந்தையை எந்த வகுப்பை சார்ந்தவர் என்றால் கணவருடைய சாதிச்சான்றிதழ் கொடுப்பார்கள் அல்லது அவர்கள் விருப்பப்பட்டால் தாயின் சாதிச்சான்றிதழ் கொடுப்பார்கள். இந்த வழக்கில் நீங்கள் நேரில் சென்று ரஞ்சித்குமார் எந்த வகுப்பை சார்ந்தவர் என்று விசாரிக்கவில்லை என்று

சொன்னால் நான் ஆவணங்கள் அடிப்படையிலும், வருவாய் ஆய்வாளர், கிராமநிர்வாக அலுவலர் வழங்கிய தகவலின் அடிப்படையில் தான் அறிக்கை வழங்கியுள்ளேன். இறந்துபோன ரஞ்சித்குமாரின் தந்தை ரமேஷ் இந்து போயர் நாயக்கர் சாதியை சேர்ந்தவர் என்று சொன்னால் அவர் எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. நீங்களோ, கிராமநிர்வாக அலுவலரோ, வருவாய் ஆய்வாளரும் முறையாக விசாரிக்காமல் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அறிக்கை கொடுத்துள்ளீர்கள் என்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. ஜாதிச்சான்றிதழின் நகலை ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளீர்களா என்றால் சாதிச்சான்றிதழ் நகலை ஒப்படைக்கவில்லை. நீங்கள் கொடுத்த அ.சா.ஆ.47 அறிக்கை தவறானது என்றும் ரஞ்சித்குமார் இந்து போயர் நாயக்கர் வகுப்பை சார்ந்தவர் என்றும் சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.10 18:06:20 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.